**IHC 034**

# உபநிடதங்களில் பௌதிக தத்துவம்: தேர்ந்தெடுக்கப்பட்ட உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்ட சிறப்பாய்வு

**கிருபைரெத்தினம் சர்வேஸ்வரன்**[1]


## ஆய்வுச்சுருக்கம்:

*இயற்கையை இறைவனாக உருவகித்து வழிபட்ட சமயங்களில் இந்துசமயம் முதன்மையானது. இத்தகைய சமயத்தின் இலக்கியங்கள் பலவும் இயற்கையை இறைவனுடன் இணைத்துப் போற்றும் பாங்கில் அமைந்துள்ளன. இந்து இலக்கியங்களுக்கெல்லாம் மூலம் வேதங்கள் ஆகும். வேதத்தின் பகுதிகளாவன சங்கிதைகள், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள் என்பவையாகும். வேதங்களின் அந்தமாகத் தோன்றிய உபநிடதங்களில் இயற்கை அம்சங்களுடன் இயைந்த வகையிலும், இயற்கையை உவமானமாக்கியும் தத்துவார்த்தங்கள் பேசப்படுகின்றமையைக் கண்டுகொள்ள முடிகின்றது. அவ்வாறாகப் பௌதிகவியலுடன் இணைந்த தத்துவார்த்தங்களை நோக்காகக் கொண்டே இவ்வாய்வு முன்மொழியப்படுகின்றது. உபநிடதங்களில் இயற்கையின் அம்சங்களுக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவமும், அவற்றைப் பேணவேண்டியதன் அவசியம் தொடர்பிலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பிரம்மம், ஆன்மா, உலகம் ஆகிய தத்துவப்பொருட்களை விளக்கப் பௌதிகவியல் அம்சங்கள் எடுத்தாளப்படுவதுடன், அவற்றின் செயற்பாடுகளை உவமித்துத் தத்துவங்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடற்பாலது. இன்றைய காலச்சூழலில் இயற்கையின் அருங்கொடைப் பெறுமானங்களை உணராது அவற்றை நிலைகுலையச் செய்கின்ற மனிதகுலத்தின் செயற்பாடுகளை விமர்சனரீதியில் நோக்குதல் மற்றும் இந்துதர்மம் இயற்கையில் இறைவனைக் கண்டு அனுஸ்டானங்களின் வாயிலாக அவற்றைப் பாதுகாத்த தன்மையை நினைவுபடுத்தி இயற்கையைப் பேணிக்காக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துதல் என்பவை இவ்வாய்வின் அடிப்படை நோக்கங்களாக அமைகின்றன. இவ்வாய்விற்கான முதன்மை மூலங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில முக்கிய உபநிடதங்களும் துணைமை மூலங்களாக வேத இலக்கியங்கள் மற்றும் இவை தொடர்பாக வெளிவந்த கட்டுரைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான இலக்கிய மூலங்களை விவரண ஆய்விற்குட்படுத்தி இவ்வாய்விற்கான பெரும்பாலான தரவுகள் சேகரிக்கபட்டதுடன், வேத சங்கிதைகள் முதலான ஏனைய இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பௌதிக தத்துவங்களை உபநிடதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பௌதிக தத்துவத்துடன் ஒப்பிட்டு நோக்க ஒப்பியல் ஆய்வு முறையும் பயன்படுத்தப்பட்டது. எனவே உபநிடதங்களில் விளக்கப்பட்டுள்ள பௌதிக தத்துவங்களை ஆழமாகச் சிந்தித்து, இறைவனுக்கு நிகராக இயற்கையை மதித்துப் போற்றுதலுடன், அதனைப் பேணிக்காக்கவும் முனைதல் வேண்டும். அத்தோடு இயற்கையின் அம்சங்களையும் பஞ்ச பூதங்களையும் மற்றும் அவற்றின் பல்வேறுபட்ட உயிரினப் பரிணாமங்களையும் இறைவனின் வடிவங்களாகக் கொண்டு, சமயரீதியாகவும் புவியியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் இயற்கையை அனைவரும் ஒன்று சேர்ந்து பாதுகாக்க முனைதல் மட்டுமே உலக இருப்பிற்கும் மனித வாழ்வின் சிறப்பிற்கும் துணை செய்யும் என்பதில் ஐயமில்லை.*


**திறவுச்சொற்கள்:** உபநிடதம், பௌதிகம், தத்துவம், இயற்கை, இறைவன்

[1]*இந்துநாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.*
sarwesh1177@gmail.com

**அறிமுகம்**

இந்துசமய நம்பிக்கைகளின் அடிப்படையில் இயற்கை என்பது இறைவனின் பிரதிவிம்பமாகக் கொள்ளப்படுகின்றது. இயற்கை இல்லாமல் எந்தவொரு ஜீவன்களும் இல்லை. இயற்கைக்கும் உலக ஜீவராசிகள் அனைத்திற்கும் இடையிலான பந்தம் என்பது என்றுமே மாறுபடாதது. இப் பந்தத்திலே மாறுபாடுகளும் தழும்பல்களும் தோன்றுமாயின் அது பிரபஞ்சத்தின் பிரளயத்திற்கே வித்திடும். இயற்கையிலிருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்ள எத்தனிக்கும் ஜீவராசிகள் அழிவைச் சந்திக்கவும் நேரிடும்.

இவ்வியற்கையின் சிறப்பு குறித்தும், இயற்கையிலிருந்தே உலகம் தோன்றியது குறித்தும் நால்வேதங்களும், அதனோடு தொடர்புடைய பல்வேறு இலக்கியங்களும் விபரித்துக் கூறுகின்றன. அந்தவகையில் வேதங்களிலும், வேத சூக்தங்களிலும் பிரபஞ்ச உற்பத்தி பற்றிய கோட்பாடு இயற்கையோடு இயைந்த வகையில் விளக்கப்படுவதனைக் காணலாம்.

> "பிரபஞ்சம் உருவாக முன்பாக எங்கும் ஆழம் காண முடியாத அளவு நீர் நிறைந்திருந்தது. அப்போது பிரபஞ்சத்திற்கு உருவமில்லை. எங்கும் கண்ணைக் குருடாக்கும் படியான இருளே நிறைந்திருந்தது. அந்நீரின் மீது இறைவன் அசைந்தார் பிரபஞ்சம் தோன்றியது…." (முகுந்தன்,ச., 2011)

என்று நீரிலிருந்து உலகம் படைக்கப்பட்டது பற்றிய சிந்தனையை வேதங்கள் முன்வைக்கின்றன. அதேபோன்று நாஸதீய சூக்தமும், புருஸசூக்தமும் பிரபஞ்ச உருவாக்கம் தொடர்பான குறிப்புக்களை இயற்கையை ஆதாரமாகக் கொண்டு விளக்குகின்றன.

> "உண்மையில் இந்தப் படைப்பு எங்கிருந்து தோன்றியது என்று யார் அறிவார்? இந்தப்படைப்பு எங்கிருந்து தோன்றியது? இதை யார் சொல்ல முடியும்?, தேவர்கள் இந்தப் படைப்பிற்கு பிறகு தோன்றியவர்கள். எனவே அவர்களுக்கு அது தெரியாது. இந்தப் படைப்பு எங்கிருந்து தோன்றியது என்று யார் அறிவார்?" (ஆசுதோஷானந்தர், 2015)

என்ற வினாக்கள் ரிக்வேதத்தின் 10:121ஆம் சூக்தமாகிய நாஸதீய சூக்தத்தின் ஆறாவது மந்திரத்தில் வினவப்படுகின்றன. இவ்வினாக்கள் பிரபஞ்சப் படைப்புப் பற்றி அக்கால மக்கள் கொண்டிருந்த வினாக்களாக அமைவதுடன், பிரபஞ்ச உற்பத்தி பற்றிய ஆராய்ச்சிக்கும் வழிவகுப்பனவாகவுள்ளன. அதன்படி ரிக்வேதத்தின் 10:90 ஆவது சூக்தமாகிய புருஸசூக்தம்,

> "(புருஸனுடைய) மனத்திலிருந்து சந்திரன் தோன்றினான். கண்ணிலிருந்து சூரியன் தோன்றினான். முகத்திலிருந்து இந்திரனும், அக்கினியும் தோன்றினர். பிராணனிலிருந்து வாயு உண்டாயிற்று" (ஆசுதோஷானந்தர், 2015)

> "தொப்புளிலிருந்து வானவெளி தோன்றிற்று தலையிலிருந்து சுவர்க்கம் தோன்றியது, பாதங்களிலிருந்து பூமியும், காதிலிருந்து திசைகளும் தோன்றின, அவ்வாறே எல்லா உலகங்களும் உருவாக்கப்பட்டன." (ஆசுதோஷானந்தர், 2015)

என்றமையும் மந்திர விளக்கங்களால் இறைவனிலிருந்து இயற்கையின் அம்சங்களும், உலகமும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்ற கருத்தைப் பதிவு செய்வதனைக் காணலாம். அதேபோல ரிக் வேதத்தின் ஐதரேய பிரமாணத்தில்,

> ''சூரியன் ஒருபோதும் உதயமாவதோ அஸ்தமிப்பதோ இல்லை மனிதனே அவ்வாறு எண்ணுகிறான் சூரியனைச் சுற்றி வருகையில் பூமியின் ஒருபகுதி பகலாகவும் மறுபகுதி இரவாகவும் தோன்றுகின்றது.'' (முகுந்தன், ச., 2011)

என்று சூரியமையக் கொள்கை பிரஸ்தாபிக்கப்படுகின்றது. இதன்படி சூரியனை மையமாகக் கொண்டு பூமி சுற்றி வருகின்ற செய்தியும், பால்வீதி மண்டலம் பற்றிய சிந்தனையும் கிறிஸ்துவிற்கு முந்திய சகாப்தத்திலே விளக்கப்பட்டுள்ளது. இது அக்கால மக்களுக்கும், இயற்கைக்கும் இடையேயிருந்த ஆழமான உறவிற்கு நிரூபணமளிப்பதாய் அமைகின்றது. வேதங்களைப் போலவே வேதங்களின் அந்தமாகிய உபநிடதங்களிலும் பல்வேறுபட்ட பௌதீகச் சிந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை பற்றிப் பின்வருமாறு நோக்குவோம்.

## உபநிடதங்களில் பௌதிக தத்துவம்

'உபநிஷத்' என்றால் குருவின் அருகிலிருந்து மெய்ப்பொருள்களைச் சிரத்தையுடன் கேட்டறிதல் என்பது பொருளாகும். பெரும்பாலான உபநிடதங்கள் குருசீட உரையாடல்களாகவும், குருகுலங்களை மையமாகக் கொண்டும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இக்குருகுலக் கல்வியிலே இயற்கையுடன் ஒன்றுபட்ட வாழ்க்கை முறைகளும், அதனோடு தொடர்புடைய பாடங்களும் பேணப்பட்டிருந்தன. மரங்கள் கல்வி கற்கும் நிழற் குடையாகவும், சுற்றுப்புறச் சூழலே ஆய்வுகூடமாகவும் பயன்பட்டது (முகுந்தன், ச., 2022).

சாந்தோக்கிய உபநிடதத்தில் சத்தியகாமனின் கதை பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஜபாலாவின் மகன் சத்தியகாமன் (ஜாபாலன்) அவன் தன் தந்தையை அறியாமலேயே பிறந்து வளர்ந்தவன். இதனாலேயே அவனைப் பலரும் ஒதுக்கியே வைத்தனர். ஒருமுறை கௌதம முனிவரைச் சந்தித்தான் ஜாபாலன். அப்பொழுது அவர் இவனிடம் 'உன் கோத்திரம் என்ன?' என்று வினவினார். அதற்கு அவன் 'என் கோத்திரம் யாது என்று யான் அறியேன் குருவே. என் தாயும் அதனை அறியமாட்டாள்' என்றான். அதற்கு கௌதமர், 'கோத்திரம் தெரியாமல் ஆனால் ஆச்சார அனுஸ்டானங்களோடு இருக்கும் அந்தணர் அல்லாத அனைவரும் காஸ்யப கோத்திரமேயாகும் என்று தர்மசாஸ்திரங்கள் கூறுகின்றன என்று கூறியதுடன், சத்தியகாம ஜாபாலா நீ உண்மையைக் கூறினாய், ஆகவே உன்னை நான் சீடனாக ஏற்று ஞானம் வழங்குகின்றேன்' என்று அவனை தன்னுடன் சேர்த்துக் கொண்டார். பின்பு அவனுக்கு உபநயனம் செய்வித்தார். பின்னர் மிகவும் இளைத்துப்போன பலம் குன்றிய 400 பசுக்களைக் கொடுத்து,

> ''ஸோம்யா நீ இவைகளின் பின் செல்வாயாக...'' (அண்ணா: 2010)

என்றார். அவற்றை ஏற்றுக்கொண்டு புறப்பட்டான் சத்திய காமன். நான் இந்த 400 பசுக்களையும் 1000 பசுக்களாக்காமல் திரும்ப மாட்டேன் என்றவாறே புறப்பட்டான். பல வருடங்கள் கழிந்தன. ஒருவழியாக 400 பசுக்களையும் 1000 நற் பசுக்களாக மாற்றி குருவின் ஆச்சிரமம் வந்து சேர்ந்தான். அவனைக் கண்ட கௌதமர் அன்போடு அவனை அருகில் அழைத்து, ‘‘ஸோம்யா உன்னைப் பார்த்தால் நீ பிரம்மத்தை அறிந்து இருக்கின்றாய் போலத் தெரிகின்றது உனக்குப் பிரம்மத்தை பற்றி உபதேசித்தது யார்.?...’’ என்று வினாவினார். அதற்கு சத்தியகாமன், ‘பசு, அன்னம், அக்னி என்ற தான் கண்ட காட்சியனுபவங்களை விளக்கினான். அவற்றினூடாகவே தான் ஞானம் பெற்றதாகக் கூறினான்.’ இங்கே சாந்தோக்கிய உபநிடதத்தில் விளக்கப்பட்டுள்ள இக்கதை, ஏதும் அறியாதிருந்த சத்தியகாமன் பசுக்களை மாத்திரம் மேய்த்து பல வருடம் கழித்து குருவிடம் திரும்பி வந்தபோது, பிரம்மத்தை அறியும் அளவு ஞானம் பெற்றிருந்தான் என்பது பற்றிக் குறிப்பிடுகின்றது. அதன்படி அவனுக்குக் குருவாக இருந்தது இயற்கை என்பது புலனாகின்றது. இயற்கை என்பது இறைவனின் பிரதிவிம்பம். அவ்வியற்கைச் சூழலே சத்தியகாமனை ஞானத்தையும், பிரம்மத்தையும் உணரும் பரிபக்குவமுடையவனாகவும் மாற்றியது.

எனவே இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தாலே பல்வேறு அனுபவங்களை உய்த்தறிய முடியும் என்பது திண்ணம். அதனை உணர்ந்ததனாலேயே கௌதமர் சத்தியகாமனுக்கு இவ்வாறு ஓர் இயற்கையுடன் கூடிய செயன்முறைப் பயிற்சியை வழங்கினார்.

சுவேதகேதுவிற்கும், உத்தலாகலருக்கும் இடையே நிகழ்ந்த பிரம்மம் மற்றும் பிரபஞ்சம் பற்றிய உரையாடலிலும் இயற்கையே உவமானமாகவும், ஆய்வு கூடமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளமையையும் காணலாம். பிரம்மத்தின் வியாபகத் தன்மையை விளக்க உப்புக் கல்லும் நீரும் எடுத்தாளப்படுகின்றது. பிரபஞ்சம் பற்றி விளக்க ஆலம்பழமும், அதன் நுண்ணிய விதையும் முன்வைக்கப்பட்டு மிக நுண்ணிய விதையிலிருந்து பிரமாண்ட ஆல விருட்சம் தோன்றுவது போல கண்களறியா பிரம்மத்திலிருந்து இப்பிரபஞ்சம் பிரஸ்தாபிக்கப்படுகின்றது என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது.

மேற்குறித்த உபநிடத தத்துவங்களை ஆய்வு செய்கின்ற பொழுது இயற்கையே இறை தத்துவத்தையும், பௌதிக தத்துவத்தையும் விளக்க எடுத்தாளப்படும் முக்கிய பிரமாணம் என்பது தெளிவாகின்றது (முகுந்தன், ச., 2020)

இவ்வாய்வின்படி உபநிடதங்களின் பௌதிக தத்துவமானது பின்வரும் தலைப்புக்களின் வாயிலாக சிறப்புப் பார்வைக்குட்படுத்தப்படுகின்றது. அத்தலைப்புக்களாக,

- இறைவன் பற்றி விளக்க இயற்கை கையாளப்படுதலும், இயற்கைக்கும் இறைவனுக்குமான தொடர்பும்
- ஆன்மா பற்றி விளக்க இயற்கை கையாளப்படுதல்
- துறவிகளோடும், மனிதர்களோடும், யோகிகளோடும் இயற்கை இணைத்துப் பேசப்படுதல்

- விலங்குகள், பறவைகள், மரம், செடிகள் பற்றிய சிந்தனைகள்
- பஞ்ச பூதங்கள் பற்றிய சிந்தனைகள்

என்பன அமைகின்றன.

**இறைவன் பற்றி விளக்க இயற்கை கையாளப்படுதல்**

கைவல்ய உபநிஷதக் கருத்தின்படி இறைவனிலிருந்து இயற்கையின் அம்சங்கள் ஸ்தாபிக்கப்பட்டன என்பதனை உணர்ந்திட முடியும்.

> ''இதிலிருந்து (பிரம்மம்) பிராணனும், மனதும், எல்லா இந்திரியங்களும், ஆகாசமும், வாயுவும், அக்கினியும், அப்புவும் (நீர்) அனைத்தையும் தாங்கும் பூமியும் உண்டாகின்றன'' (அண்ணா: 1989)

என்பதாகும். கைவல்ய உபநிஷத்தின் இரண்டாவது காண்டத்தில்,

> ''எனக்குப் பூமியுமில்லை, நீருமில்லை, அக்கினியுமில்லை, காற்றுமில்லை, ஆகாசமுமில்லை'' (அண்ணா: 1989)

என்பதாகும். இதனூடாக, இறைவனுக்கு பஞ்ச பூதங்களின் தேவையில்லை, அவன் தனித்தே இயங்கக்கூடியவன் என்று கூறப்படுகிறது. இறைவனே பஞ்ச பூதங்களையும், இயற்கை அம்சங்களையும் படைக்கின்றான். ஆகவே அவனே இயற்கையை இயக்குகின்றான் இயற்கை அவனை இயக்கவில்லை என்பது விளக்கப்படுகிறது.

ச்வேதாச்வதர உபநிஷத், ''எள்ளினுள் எண்ணை போலும், தயிரினுள் நெய்போலும், ஊற்றுக்களில் நீர் போலும், அரணிக்கட்டையில் அக்னி போலும் இந்த பரமாத்மா ஜீவாத்மாவிடம் காணப்படுகின்றது'' (அண்ணா: 1989). ஆகவே பிரம்மம் பற்றியும், ஆத்மா பற்றியும் குறிப்பிட்டு விளக்க இயற்கையின் நிகழ்வுகளை 'சுவேதாச்வதர' மஹரிஷி ஒப்பிட்டு விளக்குவதைக் காணலாம். அது பற்றிக் கூறவந்த ரிஷியானவர்,

> ''தீயில் எந்தத் தேவன் இருக்கின்றானோ, நீரில் எவன் இருக்கின்றானோ, எவன் உலகனைத்துள்ளும் புகுந்துறைகின்றானோ, எவன் செடி கொடிகளில் இருக்கின்றானோ, எவன் மரங்களில் இருக்கின்றானோ அந்தத் தேவனுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்'' (அண்ணா: 1989)

எனவே இறைவன் யாவினுள்ளும் வியாபித்துள்ளான். இயற்கையே அவனது இருப்பிடமாகும் என்பதனூடாக இயற்கைக்கும் இறைவனுக்குமிடையிலான தொடர்பு வெளிப்படுத்தப்படுகின்றது.

> ''எங்கும் கண்ணும், எங்கும் வாயுவும், எங்கும் கையும், எங்கும் காலும் உடையவன் அவனே. வானுலகையும் சிருஷ்டித்த ஒருவனேயாகிய அந்த தேவன் மனிதர்க்கு கைகளையும், பறவைகளுக்கு இறக்கைகளையும் அளித்து இயக்குவிக்கின்றான்'' (அண்ணா: 1989)

இதன்படி இயற்கையில் தோன்றிய ஜீவன்களுக்கெல்லாம் உடலும், உணர்வும் அளித்தவன் இறைவனே. இவனே இயற்கையாகவும் மாறி விளங்குகின்றான்.

> "அதுவே அக்னி, அதுவே சூரியன், அதுவே வாயு, இதுவே சந்திரன், அதுவே வெண்மையான நட்சத்திர மண்டலம், அதுவே பிரம்மா, அதுவே நீர், அதுவே பிரஜாபதி"

என்று அனைத்து இயற்கைப் பொருட்களையும் இறைவனே என விளக்குகிறது. "கரிய வண்டாகவும், சிவந்த கண் படைத்த பச்சைக் கிளியாகவும், மின்னலுடன் கூடிய மேகமாகவும், ருதுக்களாகவும், ஸமுத்திரங்களாகவும் நீயே (இறைவன்) விளங்குகின்றாய்" (அண்ணா: 1989) என்கிறது. இவற்றினூடாக இயற்கைக்கு இறைவனே மூலகாரணன் என்று குறிப்பிடுகிறது. இக்கூற்றினை விளக்கும் சுலோகமானது பின்வருமாறு அமைகின்றது.

> "நாராயணனிடமிருந்து பிராணன் உண்டாகின்றது. மனதும், எல்லா இந்திரியங்களும் உண்டாகின்றன. ஆகாயமும், வாயுவும், ஒளியும், நீரும் உலகிலுள்ள உயிர்களைத் தாங்கும் பூமியும் உண்டாகின்றன. நாராயணரிடமிருந்து பிரம்மா தோன்றுகின்றார். நாராயணரிடமிருந்து இந்திரன் தோன்றுகின்றார், பன்னிரண்டு ஆதித்யர்களும் தோன்றுகின்றனர்…." (அண்ணா: 1989)

என விளக்கப்படுகின்றது. இக்கூற்றின்படி, இயற்கை அனைத்தும் நாராயணனிடமிருந்து (இறைவன்) தோன்றுகின்றன என 'நாராயண உபநிஷத்' கூறுகிறது.

> "ஆதிஸமஸ்டி ஜீவன், உலகையே உடலாய்க் கொண்டவன் எல்லோருடைய மனோசக்தியையும் தனதாய்க் கொண்டவன்" (அண்ணா.1989)

என்கின்றது. அதன்படி உலகம் இறைவனின் உடல் எனவும் உலக இயற்கை அவனின் அங்கங்கள் மஹா நாராயண உபநிஷத் கூறுகிறது.

> "பூலோகம் உம்முடைய அடி புவர்லோகம் இடை ஸுவர்லோகம் தலை நீர் உலக வடிவாயிருக்கிறீர்…." (அண்ணா: 1989)
>
> "எவரிடம் இவ் உலகனைத்தும் குறுக்கும் நெடுக்குமாகக் கோர்க்கப்பட்டுள்ளதோ, அவரைக் காட்டிலும் உயர்ந்ததாக வேறு எதுவுமில்லை. காலத்தில் அவருக்கு முந்தியதோ பிந்தியதோ இருந்ததுமில்லை…" (அண்ணா: 1989)
>
> "…அவருடைய மூச்சுக்காற்றினிலிருந்து தமஸ் (ஜடசக்தி) தோன்றுகின்றது. தமஸிலிருந்து ஜலதத்துவம் உண்டாகின்றது. அதை விரலால் கலக்கியதும் குளிர்ச்சியும், குளிர்ச்சியைக் கலக்கியதும் நுரையும், நுரையிலிருந்து பிரம்மாண்டமும், பிரம்மாண்டத்திலிருந்து பிரம்மாவும், பிரம்மாவிடமிருந்து வாயுவும், வாயுவிடமிருந்து ஓங்காரமும், ஓங்காரத்திலிருந்து ஸாவித்திரியும்,

> ஸாவித்திரியிலிருந்து காயத்ரியும், காயத்ரியிலிருந்து உலகங்களும் தோன்றுகின்றன…'' (அண்ணா: 1989)
>
> "….ஜலமும் ஒளியும் ரஸமும் அம்ருதமுகமாக எந்தப் பிரம்மம் உளதோ அதை பூர்ப்புவஸ்ஸுவரோம் என்று பூஜிப்பதே ஒப்புயர்வற்ற தவம்'' (அண்ணா: 1989)

என்கின்றது அதர்வசிர உபநிஷத்தின் இறுதிச் சுலோகம்.

> "எங்குமுள்ள அந்தப் பரம்பொருளை, குருவின் உபதேசத்தால் பிரத்யக்'மாகக் காணலாம். எள்ளில் எண்ணை போலவும், பூவில் நறுமணம் போலும், மனித சரீரத்தின் உள்ளும் புறமும் அது (பிரம்மம்) உள்ளது'' (அண்ணா: 1989)

என்கிறது.

**ஆன்மா பற்றி விளக்க இயற்கை கையாளப்படுதல்.**

> "சத்தியத்தினாலும், தவத்தினாலும் எவன் தொடர்ந்து பார்க்கின்றானோ அவனுடைய உள்ளத்தில் எள்ளில் மறைந்திருக்கும் எண்ணை போலவும், தயிரிலிருந்த வெண்ணை போலவும், ஆற்றிலிருந்த நீர் போலவும், அரணிக்கட்டையிலிருந்த நெருப்பு போலவும் ஆத்மா வெளித் தோன்றுகின்றது'' (அண்ணா: 1989)

என ஆன்மாவின் இயல்பினைச் சுட்டுவதற்கு இயற்கையினதும், பஞ்ச பூதங்கள் சிலவற்றினதும் செயற்பாடுகள் விளக்கப்பட்டுள்ளமையினைக் காணலாம். பிரம்மோபநிஷத்தின் இறுதிச் சுலோகத்தில் பாலில் வெண்ணை போல எங்கும் வியாபித்திருக்கும் ஆத்மா என்ற கருத்து புலப்படுகின்றது. இக்கருத்தும் இயற்கைக்கும் ஆன்மாவிற்குமான பந்தத்தை நினைவுபடுத்துகின்றது.

**துறவிகளோடும், மனிதர்களோடும், யோகிகளோடும் இயற்கை இணைத்துப் பேசப்படுதல்.**

துறவி ஒருவன் கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகளில் அவன் இயற்கையை வாஸஸ்தலமாக கொள்ள வேண்டும் என்பது பற்றிய செய்திகள் ஜாபால உபநிஷத்தில் காணப்படுகின்றன. எனவே சாதாரண மனிதனைப்போல துறவியொருவனுக்கும் இயற்கை எத்தகு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை உணரலாம்.

புல்மேடு, புற்று, மரத்தடி, நதி, மணல், மலைப்பொந்து, குகை, மரப்பொந்து, மலையருவி போன்ற இயற்கையின் இடங்களில் எதுவொன்றையும், தனக்கென்று தனியொரு தங்குமிடமில்லாமல் சாது (துறவி) இயற்கையின் அனைத்து இடங்களையும் வாஸஸ்தலமாகக் கொள்ள வேண்டும் என இயற்கையின் முக்கியத்துவத்தையும், இயற்கையோடு இயைந்து வாழவேண்டிய அவசியத்தையும் இவ்வுபநிடதம் உணர்த்துகின்றது.

> "காலம் இயற்கை ஒழுங்கு எதிர்பாராத நிகழ்ச்சி பஞ்சபூதங்கள் சக்தி, புத்தி இவைகளின் கூட்டமோ அவை சிந்திக்க வேண்டியதாகும்…'' (அண்ணா: 1989)

என்கிறது. அதாவது இயற்கை பற்றிய சிந்தனை முக்கியமானது எனவும், இயற்கை குறித்த ஆராய்ச்சியில் மனிதன் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளத் தலைப்பட்டான் எனவும் கூறப்படுகின்றது. இயற்கை ஒழுங்கு… என்பன சிந்திக்க வேண்டியனவாகும் எனும் கூற்றின் வாயிலாக இயற்கையின் நடைமுறைகளையும், அதன் செயற்பாடுகளையும் ஆராய்வதில் முனிவர்கள் முனைப்புக் காட்டினர் என்பது தெளிவாகின்றது.

சாங்கிய, யோக தத்துவங்களைத் தன்னகத்தே கொண்ட ஓர் உபநிடதமாக ச்வேதாச்வதர உபநிடதம் விளங்குகின்றது. அதன்படி இயற்கையானது யோகிகளுக்கு இடையூறு செய்தல் கூடாது என்பதனையும், அதேவேளை யோகி ஒருவன் தன் யோகப் பயிற்சிகளுக்கு இயற்கையை எவ்வாறு துணையாகக் கொள்ளுதல் வேண்டும் எனவும் விளக்குகின்றது.

> ''சமமானதும், பரிசுத்தமானதும் பருக்கை கற்கள் நெருப்பு, தூசு சந்தடி நீர்த்தேக்கங்கள் முதலியவை இல்லாததும் மனதிற்கினியதும் கண்ணைப் பீடிக்காததும் காற்று அதிகமாய் வீசாததுமான குகை போன்ற இடத்தில் யோகம் பழகுதல் வேண்டும்'' (அண்ணா: 1989)

பனி, புகை, வெயில், காற்று, நெருப்பு, மின்மினி, மின்னல், ஸ்படிகம், நிலவு ஆகியவற்றின் தோற்றம் யோகமார்க்கத்தில் ஏற்படுவது பிரம்மஸாக்ஸாத்காரத்தின் முன்னோட்டமாகும் எனும் விளக்கங்கள் இயற்கையின் நிலையை எடுத்துக்காட்டுகின்றன.

> ''பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் (அதாவது அவற்றின் குணங்களாகிய கந்தம், ரஸம், ரூபம், ஸ்பர்ஸம், சப்தம்) ஆகிய ஐந்தின் உணர்ச்சி யோகத்தின் பயனாக ஏற்பட்டு யோகாக்கினியில் புடம்போட்டது போன்ற சரீரத்தையடைந்த யோகியாகிய அவனுக்கு நோயில்லை, மூப்பில்லை, மரணமில்லை'' (அண்ணா: 1989)

எனப்படுகிறது. அதாவது ஐம்பூதங்களால் ஸ்திரமாகிய உடலுக்கு மரணம், மூப்பு என்பன ஏற்படாது. எனவே இயற்கையும், அதன் சக்திகளும் ஓர் யோகிக்கு எத்தகு அவசியமாகின்றது என்பதனை உணர்ந்து கொள்ள முடியும். இயற்கை மனித உடலையும், மனதையும் வலுவுள்ளதாக மாற்றுகின்ற மகா சக்தியாய் உள்ளதாக இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

> ''பரமஹம்ஸ பரிவ்ரஜாஜகர்களுக்கும், பிரம்மச்சாரிகளுக்கும் ஆஸனம் படுக்கை எல்லாம் தரையிலேயே. அவர்கள் மண் பாத்திரமோ சுரைக்காய் பாத்திரமோ மரப் பாத்திரமோ வைத்துக் கொள்ளலாம்… மழைக்காலம் (நாலுமாதம்) சஞ்சாரம் செய்யக் கூடாது'' (அண்ணா: 1989)

என ஆருண்ய உபநிஷத் கூறுகிறது. எனவே துறவிகளுக்கு இயற்கையே இருப்பிடமாகும் என்பதும், மழைக் காலங்களில் வெளியில் அலையாமல் இயற்கை உபாதைகளிலிருந்து தம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும்.

### விலங்குகள், பறவைகள், மரம், செடிகள் பற்றிய சிந்தனைகள்

> "சிலந்திப் பூச்சி அல்லது பட்டுப் பூச்சி தனது நூல்களால் தன்னை மறைத்து கொள்வது போல, இயற்கையாகவே பிரகிருதியில் தோன்றும் பொருட்களால் எந்தத் தேவன் தானொருவனாகவே தன்னை மறைத்துக் கொள்கின்றானோ அவன் நமக்கு பிரம்ம ஸாமுஜ்யத்தை அளிக்கட்டும்." (அண்ணா: 1989)
>
> "சூரியன் பிரகாசிப்பதில்லை, சந்திரனும் நட்சத்திரங்களும் பிரகாசிப்பதில்லை, மின்னல் கொடிகளும் பிரகாசிப்பதில்லை, இந்த அக்னி எங்கனம் (பிரகாசிக்கும்) …" (அண்ணா: 1989)

என சுவேதாஸ்சுவதர உபநிஷத் குறிப்பிடுகிறது.

### பஞ்ச பூதங்கள் பற்றிய சிந்தனைகள்

> "பஞ்சாத்மமகம் என்பது ஏன்? பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற ஐந்து பொருளாகியிருப்பதனால் அதில் எது பிருதுவி, எது அப்பு, எது தேயு, எது வாயு, எது ஆகாயம் என்றால் எது கடினப்பகுதியோ அது, பிருதுவி எது திரவப் பகுதியோ அது ,அப்பு எது உ"ணமோ அது, தேயு எது சலிக்கின்றதோ அது, வாயு எது இடம் கொடுக்கின்றதோ அது, ஆகாயம் அவற்றுள் பிருதிவி தாங்குவது, அப்பு பிண்டமாக்குவது, தேயு பிரகாசப்படுத்துவது, வாயு கூட்டத்தை இயக்குவது, ஆகாயம் அவகாசமளிப்பது…."
>
> (சர்வேஸ்வரன், 2015)

என்று விளக்கப்படுதலின் வாயிலாக இயற்கையினதும், அதன் இயக்க சக்தியுமான பஞ்ச பூதங்களுக்குமிடையிலான சம்பந்தம் என்பன பற்றிய தெளிவான சிந்தனை பெறப்படுகின்றமையைக் காணக்கூடியதாகவுள்ளது.

### முடிவுரை

பிரம்மம், ஆன்மா, உலகம் என்ற முப்பொருள்கள் பற்றிப் பேசுகின்ற உபநிடதங்கள் அவற்றை விளக்க இயற்கையை உவமானமாகக் கொள்கின்றன. அவற்றின் பார்வையில் இயற்கையும், இறைவனும் பிரித்து நோக்கமுடியாத அநிர்வசின்யமாய் விளங்குகின்றன. தற்காலத்தில், இயற்கை எனும் இறைவனின் பிரதிவிம்பத்தின் அருமையறியாது அதனை மாசுபடுத்துகின்ற மனிதகுலத்தின் செயற்பாடுகள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியனவாகின்றன. இயற்கையில் இறைவனைக் கண்ட உயரிய பண்பட்ட நாகரிகத்திற்கும், சமயத்திற்கும் உரியவர்களாகி இவ்அவலம் கண்டு மௌனித்திருத்தல், துதிக்கும் தெய்வத்தை தூசித்தலுக்குச் சமமாகும்.

உபநிடதங்களில் விளக்கப்பட்டுள்ள பௌதிக தத்துவங்களை ஆழமாகச் சிந்தித்து, இறைவனுக்கு நிகராக இயற்கையை மதித்துப் போற்றுதலுடன், அதனைப் பேணிக்காக்கவும் முனைதல் வேண்டும். அத்தோடு இயற்கையின் அம்சங்களையும், பஞ்ச பூதங்களையும் மற்றும்

அவற்றின் பல்வேறுபட்ட உயிரினப் பரிமாணங்களையும் இறைவனின் வடிவங்களாகக் கொண்டு, சமயரீதியாகவும், புவியியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் இயற்கையை அனைவரும் ஒன்று சேர்ந்து பாதுகாக்க முனைதல் மட்டுமே உலக இருப்பிற்கும், மனித வாழ்வின் சிறப்பிற்கும் துணை செய்யும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**உசாத்துணை**

அண்ணா., (1989), ''108 உபநிஷத் ஸாரம் - 01ம் பாகம்'', இராமகிருஸ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

அண்ணா., (2010), 108 உபநிஷத் ஸாரம் - 02ம் பாகம், இராமகிருஸ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

ஆசுதோஷானந்தர்., (2014), தைத்தரிய உபநிஷதம், இராமகிருஸ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

ஆசுதோஷானந்தர்., (2015), வேத மந்திரங்கள், இராமகிருஸ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

பிரபுபாதா, அ.ச., (1981), பகவத்கீதை உண்மையுருவில், பக்தி வேதாந்த புத்தக நிறுவனம், சென்னை.

பொன்னையா, ஐ., (2007), சுவேதாசுவதரம் உபநிடதம் மூலமும் உரையும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

முகுந்தன், ச., (2011), இந்துக் கணித வானியல் மரபு, குருஷேத்திரா வெளியீடு, விவேகானந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

முகுந்தன்,ச., (2020), இந்து சமயத்தில் இயற்கை மெய்யியல்-திருமந்திரம், திருவாசகப் பனுவல்களை முன்னிறுத்தி, இந்துநாகரிகத்துறை, இந்துகற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

முகுந்தன், ச., (2022), வேதாந்த மெய்யியலின் நீட்சியும் நெகிழ்ச்சியும், சிவகுருநாதபீடம் வேதாந்தமடம், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

வடுவூர் நாராயணன், (1997), நான்கு வேதங்களும் பத்து உபநிஷதங்களும், நர்மதாபதிப்பகம், நல்லநூல் வெளியீட்டாளர்கள், பாண்டி பஜார், தி.நகர், சென்னை.

ஸ்தோத்ராஞ்சலி, (2010),இராமகிருஸ்ண மடம் மயிலாப்பூர் சென்னை.

HUME, R.E., (1921), "THE THIRTEEN PRINCIPAL UPAANISHADS ( Translated from the Sanskrit)" , UNIVERSITY PRESS Bombay, Calcutta, Madras.